கிறார்கள். வேறுவிதமான பெண்கள் அதற்கான பயிற்சி பெற்று, ஹெல்த் விஸிட்டேர்ஸ் பயிற்சி பெற்று, ஏ.என்.ம.-க்கான பயிற்சி பெற்று கிராமங்களில் பணி செய்ய நியமிக்கப்படுகிறார்கள். அதிகப்படியான அளவில் நியமிக்கப்பட வேண்டும் என்பது பொதுவான ஒரு வேண்டுகோள். அதற்கு அதிக அளவில் நிதி வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: செவிலியர்கள் இடையே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக, பயிற்சி அளிக்கிற எண்ணிக்கையைக் குறைத்து வருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் வளர்ந்துவருகிற சமுதாயத்தில் அப்படி அவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குப் பதிலாக குறிப்பிட்ட அளவிற்கு தனியார் ஆஸ்பத்திரிகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தால் இந்தக் கஷ்டம் ஏற்படாது. ஆகவே, அரசாங்கம் அதற்கான வழிவகை வகுத்து தனியார் ஆஸ்பத்திரிகளில் குறைந்தபட்சம் இவ்வளவு நர்ஸ்களை வைத்திருக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிற வகையில் அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்தப் பிரச்னை பற்றி இப்போது எதுவும் தெரிவிப்பதற்கில்லை. அதுபற்றி துறையினரைக் கேட்டு கலந்துதான் நான் பதில் அளிக்க முடியும்.

*** 831 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவ மனைகளில் செவிலியர்கள், நோயாளிகளின் எண்ணிக்கையில் எந்த விகிதாசார அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசு மருத்துவ மனைகளில் செவிலியர்கள் நோயாளிகளின் அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதாவது 7 படுக்கைகளுக்கு 1 செவிலியர் என்ற விகிதத்தில் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. என். கிட்டப்பா: சென்னை பொது மருத்துவ மனையில் நரம்பு சிகிச்சைப் பிரிவு என்று இருக்கிற பிரிவில் போதுமான செவிலியர்கள் இல்லை என்று கூறப்படுவது அரசுக்குத் தெரியுமா? அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உறுப்பினர் அவர்களுக்கு அண்மையில் கிடைத்த அனுபவம் என்று நான் கருதுகிறேன். எனக்கு இன்னும் அந்தத் துறையில் உள்ளவர்கள் அதுபற்றி சரியாகத் தெரிவிக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு துறையில் உள்ளவர்களும் எங்களுக்கு டாக்டர்களின்

1974 ஏப்ரல் 15]

எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும், செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும், பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும், இருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று ஒவ்வொரு துறைத் தலைவரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் முதல் அமைச்சர் அவர்களிடம் இன்னும் அதிக நிதி வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

திரு. கோவை செழியன் : எவ்வளவு மாணவர்களை எடுக்கிறார்கள் செவிலியர் பயிற்சிக்கு என்று தெரியவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். முன்பு ஒரு டேர்ம்க்கு 175 பேர்களை எடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அதை 75 ஆக ஆக்கிவிட்டார்கள். இந்தியன் நர்ஸஸ் கவுன்சில் அவர்களின் பரிந்துரைப்படி ஐந்து நோயாளிகளுக்கு ஒரு நர்ஸ் என்றும் கார்டியாலஜி அல்லது நியூராலஜி போன்ற வார்டுகளில் இருக்கிறவர்களுக்கு மூன்று பேர்களுக்கு ஒருவர் என்றும் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

இப்போது எழு படுக்கைகளுக்கு ஒருவர் என்றால் 120 நோயாளிகளுக்கு ஒரு செவிலியர் என்ற விகிதத்தில் பணியாற்றுகிறார்கள். இப்போது எழுத்து வேலையும் அதிகமாகி இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். சமீபத்தில் 120 பேர்களுக்கு ஒரு நர்ஸ் என்ற முறையில் இருந்ததன் காரணமாக செத்துப்போன ஒரு நோயாளியின் பிணத்திற்கு வாயில் மருந்தைப் போட்டுவிட்டு தண்ணீரை ஊற்றிவிட்டுப் போயிருக்கிறார்கள். இறந்து போனது அவர்களுக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத எதையாவது இந்த அவையில் பேசுவதற்கு தலைவர் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். வேலை அதிகமாக இருக்கும்போது, செத்துப் போனவனுக்கு மருந்தை ஊற்றியிருக்கமாட்டார்கள்.

திரு. கோவை செழியன் : நான் ப்ரூவ் செய்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. சம்பந்தமுள்ளதைத்தான் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில், முதல் கேள்விக்கு விடை அளிக்கப்பட்டதையொட்டி இரண்டொரு கேள்விகள் போடலாமே தவிர இதை 'டிபேட்டபிள் மாட்டராக' கேள்வி நேரத்தில் கொண்டு வரக் கூடாது என்பதற்கு விதி தெளிவாக இருக்கிறது.

திரு. கோவை செழியன் : நான் சொல்வதைக் கேட்க வேண்டும். முறை கெட்டு நான் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் விடையிலிருந்து விளக்கம் பெற இரண்டொரு கேள்விகள் கேட்கலாமே தவிர அதை விவாதத்திற்குரிய பிரச்சனையாக கேள்வி நேரத்தில் கொண்டு வரக்கூடாது. குற்றஞ்சாட்டிப் பேசுவது என்ருல், அதற்கு வேறு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்குக் கேள்வி நேரத்தைப் பயன்படுத்த வேண்டாம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நான் முதலில் படித்ததைத் திரும்பவும் படிக்கிறேன். "அரசு மருத்துவ மனைகளில் செவிலியர்கள் நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதாவது 7 படுக்கைகளுக்கு 1 செவிலியர் என்ற விகிதத்தில் நியமிக்கப்படுகிருர்கள்." பொதுக் கணக்கு அது. இது நான் சொன்ன விடை. அதிலிருந்து எழுகிற வினுக்களைக் கேட்கலாம்.

திரு. கோவை செழியன் : ஏழு படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்று சொன்னுல் 120 நோயாளிகள் கொண்ட வார்டில் கிட்டத்தட்ட 86 படுக்கைகள் இருக்கின்றன. எண்பத்தாறு படுக்கைகளுக்கு இப்போது ஒரு நர்ஸ்தான் போட்டிருக்கிருர்கள் ஜி.எச்.-ல். அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதற்கு ஏதாவது மாற்று நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போது ஏழு படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்ற அடிப்படையில், எட்டு மணி நேரத்திற்கு ஒரு செவிலியர் அந்த இடத்தில் இருப்பதால் 21 படுக்கைக்கு ஒரு செவிலியர் என்ற விகிதத்தில் அது நடைமுறையில் இருந்து வருகிறது. இருபத்தொன்று படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்று சொல்லி அமைகிற இடத்தில் சிலயிடங்களில் 26 படுக்கைகள் இருக்கலாம். சிலயிடங்களில் 32 படுக்கைகள் இருக்கலாம். ஒரு செவிலியர் பொதுவாக மேற்பார்வை பார்க்கிருர். அதனுல் சிலநேரங்களில் 21 படுக்கைகள் என்பது 26 அல்லது 32 ஆகின்றன. எண்பத்தாறு படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்பது சரியல்ல. யாராவது விடுமுறையில் போயிருக்கலாம் அல்லது யாருடனுவது பேசிக்கொண்டிருப்பார்கள்.

எனவே, 86 படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்ற நிலை எங்கும் இல்லை. படுக்கைகளின் எண்ணிக்கையை விட அதிக நோயாளிகளை சில டாக்டர்கள் அனுமதிக்கவேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. இருபத்துநான்கு படுக்கைகள் உள்ள இடத்தில் 40 நோயாளிகள் இருக்கிற நிலைமை இருக்கிறது. அந்த இடங்களில் அதிகப்படி செவிலியர்களை நியமிக்கவேண்டும் என்று மருத்துவ மனைத் தலைவர் கேட்டிருக்கிருர்கள். அதை ஓரளவிற்கு உயர்த்த அரசு

1974 ஏப்ரல் 15]

ஆணையிட்டிருக்கிறது. அந்த அளவிற்கு ஓரளவிற்கு அதிக அளவிற்கு செவிலியர்கள் இந்த ஆண்டு நியமிக்கப்படுவதற்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : திரு. செழியன் அவர்கள் கேட்ட கேள்வியை எக்ஸ்பஞ்ச் செய்யவில்லையென்றால் தவறான செய்திகள் பத்திரிகைகளில் வரும். நீங்கள் ஒரு ரூலிங் கொடுக்காவிட்டால் பத்திரிகைகளில் போட்டு விடுவார்கள். அதைப் படிக்கும்போது நமக்குக் கஷ்டமாக இருக்கும்.

திரு. கோவை செழியன் : நான் ப்ரூவ் பண்ணுகிறேன்.

திரு. நா. வீராசாமி : ப்ரூவ் செய்வது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதிக்காத கேள்விகள் நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இறந்து போனவரின் வாயில் மருந்தை விட்டார்கள் என்று சொன்னார்கள். இறந்து போய்விட்டார் என்று டாக்டர் டிக்ளேர் செய்வது வரையில் நர்ஸஸ் தங்கள் கடமையைச் செய்தாக வேண்டும். இறந்து போய்விட்டாரா இல்லையா என்பது ஐந்து நிமிட நேரம் பரிசோதனை செய்துதான் டாக்டர்கள் சொல்கிறார்கள். அந்த நேரத்தில் ஒரு மருந்து போட்டால் அந்த மருந்துக்காகும் செலவு நஷ்டம் அல்ல. அவர்கள் கடமையைச் செய்கிறார்கள் என்பதுதான் பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறும் உயிருக்கும் ஆயுள் மருந்து ஒழுக்குதல், தீது அன்றால், அல்லனபோல் ஆவனவும் உண்டு சில. ஆகவே, சாகிற உயிருக்கும் மருந்து ஊற்றுவது தீது அல்ல.

Distribution of yarn in Chinnalapatti

*810 *Q.* —THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of cards for the purchase of yarn issued in Chinnalapatti in 1973 (till the end of May);

(*b*) the population of this place; and

(*c*) the total number of weavers in this area?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 7,090 கார்டுகள்.

(இ) 24,417.

(உ) சார்ந்திருப்பவர்கள் உட்பட 16,566 பேர்கள்.